# முதல் இடைப்பருவத் தேர்வு - 2022

## ஒன்பதாம் வகுப்பு

பதிவு எண் : | | | | | |

நேரம்: 1.30

## சமூக அறிவியல்

மதிப்பெண்கள்: 50

### பகுதி - I

I. அ) சரியான விடையைத் தேர்வு செய்து எழுதவும் : 5 x 1 = 5

1. பரிணாம வளர்ச்சி வரிசையில் நவீன மனிதனின் நேரடி முன்னோர் ________ ஆவர்.
   அ) ஹோமோ ஹேபிலிஸ் ஆ) ஹோமோ எரக்டஸ்
   இ) ஹோமோ சேப்பியன்ஸ் ஈ) நியாண்டர்தால் மனிதன்
2. ஹரப்பா மக்கள் ________ பற்றி அறிந்திருக்கவில்லை.
   அ) தங்கம் மற்றும் யானை ஆ) குதிரை மற்றும் இரும்பு
   இ) ஆடு மற்றும் வெள்ளி ஈ) எருது மற்றும் பிளாட்டினம்
3. பாறைக்குழம்பு காணப்படும் அடுக்கு ________.
   அ) புவிமேலோடு ஆ) கவசம்
   இ) கருவம் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை
4. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
   அ) இந்தியா ஆ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
   இ) பிரான்ஸ் ஈ) வாட்டிகன்
5. கூற்று (A) : மேம்பாடு வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது.
   காரணம் (R): மக்கள் அதிக வருவாய், சிறந்த கல்வி, உடல் நலம் மற்றும் ஊட்டச்சத்து, குறைந்த வறுமை பெறுவார்கள்.
   அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது. மற்றும் (R), (A) வை விளக்குகிறது.
   ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது. (R), (A) வை விளக்கவில்லை.
   இ) (A) சரியானது மற்றும் (R) தவறானது
   ஈ) (A) தவறானது மற்றும் (R) சரியானது

ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக : 4 x 1 = 4

6. கற்கருவிகளை உருவாக்குவதற்குத் தேவையான வழிமுறைகளும், நுட்பமும் ________ தொழில்நுட்பம் என அழைக்கப்படுகின்றன.
7. எகிப்தியர்கள் தொடக்க காலத்தில் பயன்படுத்திய உருவ எழுத்துக்கள் சார்ந்த முறை ________ ஆகும்.
8. இந்தியா ________ மக்களாட்சி முறையினைக் கொண்டுள்ள நாடாகும்.
9. இந்தியாவில் அதிக கல்வியறிவு பெற்றுள்ள மாநிலம் ________.

இ) பொருத்துக: 4 x 1 = 4

| | | | |
|---|---|---|---|
| 10. காலநிலையியல் | - | அ) | அர்த்தசாஸ்திரம் |
| 11. கல் விழுது | - | ஆ) | காலநிலை பற்றிய படிப்பு |
| 12. சாணக்கியர் | - | இ) | கல்வி |
| 13. மனிதவளம் | - | ஈ) | வாடிகன் |
| | - | உ) | சுண்ணாம்புப் பாறை |

## பகுதி - II

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும் : 5 x 2 = 10

14. வரலாற்றுக்கு முந்தைய காலத் தமிழக மக்களின் வாழ்வில் கால்நடை வளர்த்தல் ஏற்படுத்திய தாக்கம் பற்றி குறிப்பு தருக.
15. சிகுரட்களின் முக்கியமான பண்புகளைக் கூறுக.
16. புவியின் உள் அடுக்குகள் யாவை?
17. வானிலை சிதைவு - வரையறு.
18. வளிமண்டல அடுக்குகளின் பெயர்களை எழுதுக.
19. மக்களாட்சி அரசாங்க அமைப்பினைப் பற்றி கூறுக.
20. பொருளாதார மேம்பாட்டின் குறியீடுகள் என்ன?

## பகுதி - III

எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும் : 4 x 5 = 20

21. விவசாயம், பானை செய்தல், உலோகக் கருவிகள் செய்தல் ஆகிய துறைகளில் நிகழ்ந்த வளர்ச்சி பெருங்கற்காலத்தில் ஏற்பட்ட மிக முக்கியமான மாற்றமாகும். - உறுதிப்படுத்தவும்.
22. சிந்து சமவெளி நாகரீகத்தின் மறைந்த பொக்கிஷங்களைப் பற்றி எழுதுக.
23. புவி அமைப்பை விவரி.
24. அ) வேறுபடுத்துக:
    - i) முதன்மை அலைகள் மற்றும் இரண்டாம் நிலை அலைகள்
    - ii) வானிலை மற்றும் காலநிலை

    ஆ) காரணம் அறிக :

    தீப்பாறைகள், முதன்மைப் பாறைகள் அல்லது தாய்ப்பாறைகள் என்றும் அழைக்கப்படுகின்றன.
25. மக்களாட்சியில் உள்ள சவால்கள் யாவை?
26. நிலையான மேம்பாட்டிற்கான கொள்கைகளைப் பற்றி விவரி.

## பகுதி - IV

27. உலக வரைபடத்தில் கீழ்காணும் இடங்களைக் குறிக்கவும். 7 x 1 = 7

    வரலாறு : பண்டைய நாகரிகங்கள்
    - i) எகிப்து
    - ii) சிந்து

    புவியியல் :
    - iii) பசிபிக் நெருப்பு வளையம்
    - iv) இமயமலை
    - v) கிழக்கு ஆப்பிரிக்காவின் பிளவுப் பள்ளத்தாக்கு
    - vi) ஏதேனும் ஒரு டெல்டா
    - vii) ஏதேனும் ஒரு பாலைவனம்

******